## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 277/2010

நாள்: 21.04.2026

பெயர்: மோகன் (வா.சா.1) த/பெ: சோமசுந்தரம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>

1. தாவா சொத்து என்பது சுத்தமல்லி வாய்க்காலுக்கு மேல்புற கரையை ஒட்டி அமைந்துள்ளது என்றால் வாய்க்காலை ஒதுக்கி உள்ளது. வா.சா.ஆ.1 நான் பார்த்துள்ளளேனா என்றால் அது அப்பா ஏற்படுத்தி கொண்டது. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்த போது தான் பார்த்தேன். வா.சா.ஆ.1 ஐ குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும் அதனால் இதற்கு மாத வாடகையாக ரூ.50/- என நிர்ணயம் செய்து அட்வான்ஸ் ரூ.1500/- பிரதிவாதியிடம் இருந்து என்னை பெற்றுக் கொள்ளும் படி கூறினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது அப்பா பராமரிக்கவில்லை என்றும் பிரதிவாதி வாடகைக்கு ஒப்பு கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ளது பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றால் அதை குறித்து அப்பாவிற்கு தான் தெரியும். தாவா சொத்தில் பிரதிவாதி தான் வீடு கட்டி அதில் சீட் அமைத்து மின் கட்டணம் செலுத்தி வீட்டு வரி, குடிநீர் வரி செலுத்தியும் அனுபவம் செய்து வருகிறார் என்றால் வாடகைக்கு தான் குடியிருந்து வருகிறார். இந்த வழக்கில் எந்த விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிப்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல் என்றும் பிரதிவாதியை வீணாக அலைக்கழிப்பதால் அவருக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கு நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-மோகன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/-S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்